2015 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

120—

ஆரம்ப சுகாதார நிலையம்

***50580—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, இளையாளூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விதிமுறைகளின்படி இளையாளூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களுக்காக நான் மக்களால் நான்', என்று தாய்த் தமிழகத்தை அமைதி, வளம், வளர்ச்சி கண்டு சாதனைத் திட்டங்களைத் தந்தவரே! ஆயிரம் சூழ்ச்சிகள் அணி வகுத்தாலும் அற்பனின் எண்ணங்கள் பழியைச் சேர்த்தாலும் எதிலும் வெல்லும் தாயே! இதிலும் வெல்வீர்கள் தாயே! என்று மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனது பூம்புகார் தொகுதிக்குட்பட்ட இளையாளூர் வடகரை ஊராட்சியில் 1958-ல் ஊரக மருத்துவமனை திறக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வந்தது. தற்போது இந்த மருத்துவமனை சிதிலமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. இப்பகுதிவாழ் மக்களின் நலன் கருதி இவ்வூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பொதுவாக சமவெளிப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க 30 ஆயிரம் மக்கள்தொகை தேவைப்படுகின்றது. 8 கி.மீ. தூரத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கவேண்டும் என்பது மத்திய அரசு வகுத்திருக்கின்ற விதிமுறையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஊராட்சி ஒன்றியத்திலே ஏற்கெனவே ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக இருந்து அங்கு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகையினாலே, மேற்படி இளையாளூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையாளூர் ஊராட்சி சிறுபான்மையின மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. மேலும், அன்னவாசல், கழனிவாசல், கடக்கம் மற்றும் குளிச்சார் ஆகிய ஊராட்சிப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதி. அங்கு சுமார் இருபதாயிரம் மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் மருத்துவ வசதி பெறவேண்டுமென்றால் 8 கி.மீ. தொலைவிலுள்ள மயிலாடுதுறைக்கும், 8 கி.மீ. தொலைவிலுள்ள செம்பனார்கோவிலுக்கும் செல்லவேண்டிய சூழல் உள்ளதால், மக்களின் நலனில் மகத்துவம் காணும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின்*

2015 ஏப்ரல் 1]

அரசு இப்பகுதிவாழ் மக்கள் மருத்துவ வசதிபெற ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு முன்னுரிமை அடிப்படையிலே பரிசீலித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மக்கள்தொகையின் எண்ணிக்கைக்கேற்ப, விதிமுறைகளுக்கேற்ப வரும் காலத்தில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள், கேள்வி நேரத்தின் போது குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்ற அடிப்படையிலே, அவர் கூறிய அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) ஒசூர் தனியார் பள்ளியில் மேல்நிலை கணிதத் தேர்வின்போது வினாத் தாள் வெளியானது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் சொல்கிறேன். வேறு அலுவல் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். ஓசூர் தனியார் பள்ளியில் மேல்நிலை கணிதத் தேர்வின்போது வினாத் தாள் வெளியானதாக வந்த செய்தி குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. எ.வ. வேலு, திரு. இ. பெரியசாமி, திரு. அர. சக்கரபாணி,